ஒய்/உள்.கண/2016 2016-01-20

அனைத்து மாவட்டச் செயலாளர்கள் மற்றும்
பிரதேச செயலாளர்களுக்கு,

**<u>ஆயுதப்படைச் சேவை ஓய்வூதியங்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்தல்.</u>**

தற்சமயம் தரவுத் தொகுதியின் மூலம் கீழ் குறிப்பிடப்படும் வகைக் குறியீடுகளின் கீழ் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்ற ஆயுதப்படைச் சேவை ஓய்வூதியங்களை இராணுவம், விமானப்படை மற்றும் கடற்படை என்பனவற்றின் அடிப்படையில் வெவ்வேறாக இனங்காண வேண்டியுள்ளது.

| வகைக் குறியீடு | விபரம் |
|---|---|
| 3 | ஆயுதப்படைச் சேவை ஓய்வூதியம் |
| 4 | ஆயுதப்படைச் சேவை தங்கி வாழ்வோர் கொடுப்பனவு |
| 6 | ஆயுதப்படைச் சேவை நலிவுநிலை ஓய்வூதியம் |
| 10 | ஆயுதப்படைச் சேவை விசேட நட்டஈடு |
| 40 | ஆயுதப்படைச் சேவை விதவைகள் ஓய்வூதியம் |
| 41 | ஆயுதப்படைச் சேவை அனாதைகள் ஓய்வூதியம் |
| 42 | ஆயுதப்படைச் சேவை வலது குறைந்தோர் ஓய்வூதியம் |
| 43 | ஆயுதப்படைச் சேவை பாதுகாவலர் ஓய்வூதியம். |
| 44 | ஆயுதப்படைச் சேவை தபுதாரர் ஓய்வூதியம் |
| 45 | ஆயுதப்படைச் சேவை தபுதாரர் அனாதைகள் ஓய்வூதியம் |
| 46 | ஆயுதப்படைச் சேவை தபுதாரர் வலது குறைந்தோர் ஓய்வூதியம் |

அதன் படி தங்களது மாவட்டத்தினது பிரதேச செயலகங்களின் கீழ் ஓய்வூதியம் பெறுகின்ற ஓய்வூதியர்களது கோவைகளில் உள்ளடங்கியுள்ள தகவல்களை கீழ்வரும் மாதிரிப்படிவத்தின் அடிப்படையில் தயாரித்து 2016 மார்ச் மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிடத்தே பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவுடன் அறியத் தருகின்றேன். அதற்காக மாவட்டத்தில் அமர்த்தப்பட்டுள்ள உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் மாவட்ட ஓய்வூதிய உத்தியோகத்தரின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ளுமாறு தொடர்ந்தும் அறியத் தருகின்றேன்.

**ஆயுதப்படைச் சேவை ஓய்வூதிய வழங்கல்கள்.**

| தொடர் இலக்கம் | வகைக் குறியீடு | ஓய்வூதிய இலக்கம் | பெயர் | பதவி | படைவீரர் இலக்கம் | வாழ்க்கைப்படி வழங்கப்படுகின்றதா? இல்லையா என்பது | வயது 55 வரையில் சம்பளம் வழங்கப்படுகின்றதா? (கோவையின் படி) | இராணுவ/விமான/ கடற்படை ஓய்வூதியமா என்பது | கோவை இருக்கின்றதா இல்லையா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

தயாரித்தவர்: ..........................................

பரீட்சித்தவர்: ..........................................

மேற்குறித்த தகவல்கள் சரியானவையென உறுதிப்படுத்துகின்றேன்.

..................................
கணக்காளர்
பிரதேச செயலகம்

கோவைகள் இன்றிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்ற ஓய்வூதியங்கள் தொடர்பிலும் என்னிடத்தே தகவல்களை அறிக்கையிடுமாறு அறியத் தருகின்றேன்.

**(ஒப்பம்)**
**எஸ்.எஸ். ஹெட்டிஆரச்சி,**
**ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.**

பிரதிகள் -

1. செயலாளர், பொது நிர்வாக அமைச்சு - தகவலுக்காக
2. செயலாளர், உள்நாட்டலுவல்கள் அமைச்சு - தகவலுக்காக
3. பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் - தகவலுக்காக
4. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், மாவட்டச் செயலகம் - தகவல் மற்றும் தேவையான ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு.
5. மாவட்ட ஓய்வூதிய உத்தியோகத்தர் - தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக